முல்லைப் பெரியாறு அணை குறித்த காட்சி!

'எம்புரான்' திரைப்படத்தில் அந்தக் காட்சி நீக்கப்பட்டு விட்டது!

பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்!

சென்னை, ஏப்.6-

சட்டப்பேரவையில் உறுப்பினர் வேல் முருகன் 'எம்புரான்' திரைப்படத் தில் 'முல்லைப் பெரியாறு' சம்பந்தப்பட்ட காட்சி குறித்து சிறப்பு கவனஈர்ப்பில் பேசினார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்தப் படத் தில் இருந்த அந்தக் காட்சி நீக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

வேல்முருகன்: தமிழ்நாட்டின் மிக முக்கியமான பிரச்சினையாக மதுரை, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட தென்மா வட்ட விவசாயிகளின் உயிர்நாடியாக இருக்கின்ற முல்லைப் பெரியார், அந்த அணைபேராபத்துவிளைவிக்கக்கூடிய அணை என்றும், அந்த அணை உடைந்தால் கேரளா மாநிலம் முற்றும் முதலுமாக அழியும் என்றும் இன் றைக்கு ஒரு படம் எம்புரான் என்கின்ற படம் காட்சி அமைப்புடன், அந்தப் படம் தற்போது, தமிழ்நாட்டிலே தமிழிலே வெளியிடப்பட்டு, தற்போது ஓடிக் கொண்டிருக்கிறது.

அமைச்சர் துரைமுருகன்: நான் அந்த படத்தை பார்க்கவில்லை. ஆனால் பார்த்தவர்கள் சொன்னதைக் கேட்டபொழுது, ஒரு பக்கத்தில் பயமும், இன்னொரு பக்கம் கோபம்தான் வரும். ஆனால், பிரச்சினை ஒன்றை நான் தெரிவிக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு நிகழ்வை செய்திருந்தால், அது தேவையற்ற ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன். வேறு ஒரு மாநிலத்தில் இந்தப் பிரச்சினை கிளப்பக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதாவது நல்லது. நான் சொல்கிறேன். இன்றைக்கு முல் லைப் பெரியார் பிரச்சினை என்ன?

பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் அந்தக் காட்சிகளோடு திரையிடப் படக் கூடாது என்பது தான் கோரிக்கை. அதை cut செய்யப்பட்டுவிட்டால், நீங் கள் அதை ஆய்வு செய்து முடிவு எடுங் கள். முதலமைச்சர் அவர்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்சாரில் அந் தக் காட்சியை நீக்கவில்லை. ஆனால் படம் வெளியான பிறகுதான், இந்தச் செய்தி வெளியே வந்து, அதற்குப் பிறகு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. உடனடி யாக அந்தக் காட்சிகள் அனைத்தும் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கி றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கோவையில் கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, துணை முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக மாணவர் அணியின் கோவை, திருப்பூர், கரூர், நீலகிரி மாவட்டங்களுக்கான கள ஆய்வுக் கூட்டம் கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட

வக்ஃபு வாரிய திருத்தத்திற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

காங்கிரஸ் - அகில இந்திய மஜ்லிஸ் கட்சிகள் தொடர்ந்தன!

புதுடெல்லி, ஏப்.6-

நாடாளுன்றத்தில் நிறை வேற்றப்பட்ட வக்ஃப் வாரிய திருத்த சட்டத்திற்கு எதிராக, காங்கிரஸ், அகில இந்திய மஜ் லிஸ் கட்சிகளின் சார்பில் உச் சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளன.

கடும் எதிர்ப்புகளையும் மீறி, ஒன்றிய பாஜக அரசு, நாடாளுமன்றத்தில் வக்ஃப் வாரிய திருத்த மசோதாவை நிறைவேற்றி இருப்பது, நாடு முழுவதும் பெரும் கொந்த ளிப்பை ஏற்படுத்தியுள்ளது. மசோதா வாபஸ் பெற வலி யுறுத்தி, பல்வேறு மாநிலங்க ளில் போராட்டங்களும் வெடித்துள்ளன. இந்த நிலை யில், வக்ஃப் திருத்தச் சட் டத்தை எதிர்த்து உச்சநீதிமன் றத்தில் காங்கிரஸ் மற்றும் அகில இந்திய மஜ்லிஸ் கட்சி களின் சார்பில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. காங் கிரஸ் எம்.பி. முகமது ஜாவத் தொடர்ந்த வழக்கில், வக்ஃப் சொத்துகள் மற் றும் அவற்றின் நிர்வாகத்தின் மீது தன்னிச்சையாக கட்டுப் பாடுகளை திணிக்கும் இம்ம சோதா, அரசமைப்புச் சட் டப் பிரிவுகளை மீறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இஸ்லாமிய மதத்தைப் பின் பற்றுவோரிடம் மட்டுமே வக்ஃப் சொத்துகளை அர்ப்ப ணிக்க முடியும் உள்ளிட் டவை மசோதாவில் தெரிவித் திருப்பது அரசமைப்புச் சட் டத்தின்கீழ் செல்லாது என அறிவிக்கவும் மனுவில் கோரப்பட்டுள்ளது. மதத்தை பின்பற்றும் காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, வக்ஃப் சொத்துகளை உரு வாக்குவதற்கான கட்டுப்பா டுகளை இம்மசோதா அறிமு கம் செய்துள்ளதாகவும், இஸ்லாமிய சட்ட வழக்கத் தின்படி, அடிப்படை உரி மையை மசோதா மீறுவதா கவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. இந்து மத அறக்கட்ட ளைகள் இந்துக்களால் நிர்வகிக்கப்படும் நிலையில், வக்ஃப் நிர்வாக அமைப்புக ளில் இஸ்லாமியர் அல்லாத உறுப்பினர்களை இடம்பெ றச் செய்வது பாரபட்சமான தலையீடு எனவும், மத அமைப்புகள் மீதான கட்டுப் பாட்டை அரசு அதிகாரிகளி டம் ஒப்படைப்பது, வக்ஃப் நிர்வாகத்தில் தன்னாட்சியை நீர்த்துப் போகச் செய்வதாக உள்ளதாகவும் மனுவில் தெரி விக்கப்பட்டுள்ளது. மத சொத்துகள் மீதான கட்டுப் பாட்டை மதச்சார்பற்ற அதி காரிகள் வசம் மாற்றுவது, மத ரீதியிலான உரிமையை மீறுவ தாகும் என உச்சநீதிமன்றம் கடந்த 1954இல் அளித்த தீர்ப் புக்கு எதிராக இம்மசோதா உள்ளதாக தனது மனுவில் குறிப்பிட்டுள்ள காங்கிரஸ் எம்.பி. முகமது ஜாவத், ராம ஜென்மபூமி பாபர் மசூதி வழக்கு தீர்ப்பில் இக்கோட் பாடு உறுதி செய்யப்பட்ட நிலையில், அதற்கு எதிராக இத்திருத்தம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மஜ்லிஸ் கட்சித் தலைவர் அஸாதுதீன் ஒவைசி தாக்கல் செய்துள்ள மனுவில், வக்ஃப் சொத்துகள் மீதான சட்டபூர்வ பாதுகாப் புகளைப் பறிப்பது, இஸ்லா மியர்களைக் குறிவைக்கும் பாரபட்சமான நடவடிக்கை யாகும் என தெரிவித்துள் ளார். வக்ஃப் வாரிய திருத்த சட்டத்திற்கு எதிராக திமுக சார்பிலும் உச்சநீதிமன்றத் தில் வழக்கு தொடரப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்திருந்த தும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, வக்ஃப் சட்டத்திருத்த மசோதா தொடர்பாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர் முவை அவசரமாக சந்திக்க நேரம் கோரியுள்ளதாக அனைத்து இந்திய முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் தெரி வித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவிற்கு முதல்வர் வருகை!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அனைத்து துறை அலுவலர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார்!

திருவள்ளூர், ஏப்.06

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவிற்கு வருகை தரு வதை முன்னிட்டு திரு வள் ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்க ளுக்கு மேற்கொள்ள வேண் டிய பணிகள் குறித்து ஆலோ சனை கூட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் தலைமை தங்கினார் சட்ட மன்ற உறுப்பினர்க திருத் தணி எஸ்.சந்திரன், ஆ.கிருஷ் ணசாமி, மாதவரம் எஸ். சுதர்சனம், துரை சந்திரசேகர் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் ஆர்.சீனிவாசபெரு மாள், ஆவடி மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி. ஆவடி காவல் துணை ஆணை யர்கள் பாலாஜி, சங்கர் ஆகி யோர் முன்னிலை வகித்தார் கள் இக்கூட்டத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு வேண்டிய பணிகள் குறித்து ஆலோச னைகள் வழங்கினார்.

இதனை தொடர்ந்து பேசிய அவர் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் ஆண்டார்மடம் என்னும் இடத்தில் ஏப்ரல் 19.04.2025 அன்று மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடைபெறும் அரசு விழாவிற்கு வருகை தருவதை முன்னிட்டு அடிக்கல் நாட்டி வைக்கப்படும் திட்டப்பணி கள் குறித்தும், முடிவுற்ற திட்ட பணிகள் குறித்தும், பயனாளிகள் தேர்வு குறித் தும், விழா அன்று பயனாளி களை குறிப்பிட்ட நேரத் திற்கு விழா மேடைக்கு அழைத்து வருவது குறித்தும், பயனாளிகளுக்கான நலத் திட்டங்களை அன்றே வழங் கப்படுவது குறித்தும், அவர் கள் தேவையான உணவுகள் மற்றும் குடிநீர் வசதி அந்தந்த துறைகள் அலுவலர்கள் அவர் களுக்கு வழங்கி விழா மேடைக்கு அழைத்து வரு வது குறித்தும், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும், விழா வுக்கு வரும் பொதுமக்கள் அரசியல் பிரமுகர்கள் மேற் கொள்ள வேண்டிய வழி காட்டு நெறிமுறைகள் குறித் தும், வாகனங்கள் நிறுத்து மிடம் குறித்தும்,மீட்பு வாக னங்கள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்வது குறித்தும், பொதுபணித் துறை விழா நடைபெறும் இடம் மற்றும் மேடைகளை உறுதி சான்று தருவது குறித் தும், அதேபோல் எலட்ரிகல் துறை உறுதி சான்றுகள் வழங் குவது குறித்தும், பயனாளி கள் மற்றும் நலத் திட்ட உத விகள் மேலும், உயர்த்துவது குறித்தும் ஆகியவை தொடர் பாக கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. மேலும், அனைத்து துறை அலுவலர்கள் தங்க ளுக்கு ஒதுக்கப்பட்ட பணி களை சிறப்பாக செயல்பட்டு விழாவினை அனைத்து துறை அலுவலர்களின் முழு உழைப்போடு சிறப்பாக வடிவமைத்து தமிழ்நாட்டி லேயே திருவள்ளூர் மாவட் டம் தான் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா வினை சிறப்பாக செயல் பட்டு இருந்தது என்ற நிலையை பெறுவதற்கு அனைவரும் மாவட்ட ஆட் சியரின் வழிகாட்டுதலுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவுறுத்தினார்கள்

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத் தில் தமிழ்நாடு அரசு பணியா ளர் தேர்வாணையம் தொகுதி IV தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 25 நபர்களுக்கு வருவாய் மற் றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் கிராம நிர்வாக அலுவலருக்கான பணி நிய மன ஆணைகளை மாண்பு மிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் வழங்கினார் இந்நி கழ்வில் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் - ஜான் பொன்னுசாமி ஏற்பாட்டில்

பூண்டி வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், ஏப் 06;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பூண்டி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் இன்று 06042025 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி அள வில் கச்சூர் ஸ்ரீதேவி திரு மண மண்டபம் ஒன்றிய கழகச் செயலாளர் ஜான் பொன்னுசாமி ஏற்பாட்டில் நடைபெறுகிறது இதில் பூண்டி கிழக்கு ஒன்றிய கழ கச் செயலாளர் டி.கே.சந்திர சேகர் ஒன்றிய கழக நிர்வாகி கள் இராகவன், டி. வேல்முருகன், குருமூர்த்தி, ஸ்ரீதேவி, நாகபூருஷணம் , சீனிவாசலு, நாகராஜ் , ரகு, ஆகியோர் வரவேற்புரையற் றிகிறார்கள் மாவட்ட நிர்வா கிகள் மு.பகலவன், ஜெ. மூர்த்தி, என்.எல்.ரவி, மு.கதி ரவன், கே.வி.ஜி.உமா மகேஸ் வரி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராம மூர்த்தி, கே.சுப்பிரமணி, பா.செ.கான்சாகிப், பி.வெங் கடாசலபதி, டாக்டர் பரிம ளம், கே.வி.லோகேஷ், நிர் புவை அ.அறிவுமணி, துணைப் பொருளாளர் திரு வடத்தனூர்

ஏ.எஸ்.முஹம்மத் ரபீக் மற்றும் நிர்வாகிகள் உளுந் தூர்பேட்டை எஸ்.வெங்க டேசன், தஞ்சை சாந்தி பால சுப்ரமணியன், மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், மருதூர் ம. பிரேம்குமார், திருச்சி ஏ. ஜெ.எம்.இஷாக் ஜக்கரியா, மருதூர் ம.பிரேம்குமார், சூத் தாநல்லூர் ஏ.ஷாகுல் ஹமீது, பரங்கிப்பேட்டை ம.நசரு தீன் முகம்மது, இராதாபுரம் அஜீஜுல்லா, உடையார்பா ளையம் செந்தில்குமார், ஆத் தூர்ஜான்பாட்ஷா,கோட்டை பி.மோதிலால், பரமக்குடி பி.மோகன், திருவாரூர் திருவ ரங்கன் மற்றும் நிர்வாகிகளும் தமிழ் அமைப்புகளின் பிரதிநி திகளும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

தலைமை: தி.மு. தனியரசு! டி.சி.வி. மணிகண்டன் ஏற்பாட்டில்

திருவொற்றியூர் 8வது வட்டத்தில் நல உதவிகள் - தண்ணீர் பந்தல்!

மாதவரம் சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி. சங்கர் வழங்குகின்றனர்!

சென்னை, ஏப்.06

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வட்ட தி.மு.க. சார்பில் இன்று (5.4.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணிக்கு பெரியார் நகரில் வட்ட செயலாளர் டி.சி. வி.மணிகண்டன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் 1-வது மண்டல குழு தலைவர் தி.மு. தனியரசு தலைமையில் நல உதவிகள் மற்றும் தண் ணீர் பந்தல் திறக்கப்படுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாத வரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ. முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 1,000 பேருக்கு நலத்திட்ட உதவிகள், மதிய உணவு வழங்கி மற்றும் தண்ணீர் பந்தல் திறக்க உள்ளார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகி யோர் பங்கேற்க உள்ளனர்.

ஆகையால் மாநில மாவட்ட நிர்வாகிகள், பொது குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மா

வட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தி.மு.க., அயலக அணி சார்பில் குவைத் நாட்டில்

"கலைஞர் நூற்றாண்டு நினைவுக் கோப்பை 2025" கிரிக்கெட் தொடக்க விழா!

சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பு! செ.உமாராணி,

விஜயன் ராமகிருஷ்ணன், கன்னிகை ஜி.ஸ்டாலின், பரிதிஇளம்சுருதி காணொலி மூலம் தொடங்கி வைத்தனர்!

குவைத், ஏப்.6-

திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி சார்பில் குவைத் நாட்டில் தி.மு.கழக அயலக அணி தலைவர் டாக் டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக் கோட்டை எம்.எம்.அப் துல்லா எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி குவைத் மண்டலத்தின் சார்பாக தி.மு. கழக அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில் "கலைஞர் நூற்றாண்டு நினைவு கோப்பை 2025" மாபெரும் கிரிக்கெட் தொடர் தொடக்க விழா நடைபெற்றது.

இந்த கிரிக்கெட் தொட ரின் தொடக்க விழாவில் கழக அயலக அணியின் மாநில துணைச்செய லாளர் கள் செ.உமாராணி, விஜயன் ராமகிருஷ்ணன், கன்னிகை ஜி.ஸ்டாலின், பரிதிஇளம்சு ருதி ஆகியோர் காணொளி மூலம் போட்டிகளை தொடக்கி வைத்து வாழ்த் துரை வழங்கினர்.

கலைஞர் நூற்றாண்டு நினைவு கோப்பை மாபெ ரும் கிரிக்கெட் தொடரில் 36 ஆண்கள் அணியினரும், 10 பெண்கள் அணியினரும் கள மிறங்குகின்றனர். குவைத் நாட்டில் தமிழ் அமைப்பு இப்படி ஒரு மாபெரும் கிரிக் கெட் தொடரை நடத்துவது இதுவே முதல் முறை. இதற்கு முன் நடந்த "கலைஞர் நூற் றாண்டு கிரிக்கெட் கோப்பை" போட்டிகளில் 30 அணிகள் களமிறங்கின. இந்த போட் டியில் 46 அணிகள் களம் இறங்குவது ஒரு வரலாற்று நிகழ்வாக அமைந்துள்ளது.

10 வாரங்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த கிரிக்கெட் தொடரின் இறு திப்போட்டி வருகின்ற ஜூன் மாதம் 6 ஆம் தேதி நடை பெற இருக்கின்றது.

இந்த இறுதிப் போட்டி யின் பரிசளிப்பு விழா, கலை ஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் அயலகத் தமி ழர் எழுச்சி மாநாடு மிகப் பிரம்மாண்ட மான அளவில் நடத்திட தி.மு.க. அயலக அணியின் குவைத் மண்டல நிர்வாகி கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

காணொளி மூலம் கலந்து கொண்டு நிகழ்ச்சி துவக்கி வைத்து வாழ்த்துரை வழங் கிய கழக அயலக அணியின் மாநில நிர்வாகிகள் பேசும் போது குவைத் நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு பிரம்மாண்ட நிகழ்வும் கழக அயலக அணிக்கு வலு சேர்க் கும் விதமாக அமைந்துள் ளது. மேலும் வரும் காலங்க ளில் இன்னும் சிறப்போடு செயல்பட எங்களது வாழ்த் துகள் எனக்கூறி முனைப்பு டன் செயல்படும் குவைத் மண்டல நிர்வாகிகளுக்கு மேலும் ஊக்கமூட்டினார்.

இந்நிகழ்வில் அமைப்பின் செயலாளர் புதூர் உத்தம னூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர்கள் ஆயங்குடி ஜெ.செயது முஸ் தபா, குடந்தை சி.தியாகரா ஜன், துணைச் செயலாளர் கள் முத்துப்பேட்டை ம.சப ரிவாசன், திருவாரூர் ச.குமார், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது, பொருளாளர்

தியாகராயர் நகர் மேற்கு பகுதிக்குட்பட்ட 5 இடங்களில் நீர் மோர் பந்தல்!

133வது - 133 'அ' வட்ட கழக செயலாளர்கள் பி.ஜெயக்குமார், பி.மாரி அறிக்கை!

சென்னை, ஏப்.6-

தியாகராயர்நகர் மேற்கு பகுதி 133வது மற்றும் 133 'அ' வட்டத்தில் 5 இடங்களில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா, தியா கராயர் நகர் மேற்கு பகுதி செய லாளர் கே.ஏழுமலை எம்.சி. தலைமையில், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கரு ணாநிதி எம்.எல்.ஏ. முன்னிலையில், சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ கலந் துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைக்கவுள்ளார்கள்.

இன்று (06-04-2025 - ஞாயிற் றுக்கிழமை) காலை 10 மணியள வில் 133 மற்றும் 133 'அ' வட்டத் தில் 5 இடங்களில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட வுள்ளது.

1. 133 - 133 'அ' வட்டம் - வட்ட செயலாளர்கள் பி.ஜெயக் குமார், பி.மாரி அவர்கள் மற்றும் ஹரி ஏற்பாட்டில் துரைசாமி சாலை, உஸ்மான் சாலை சந்திப் பில்.

2. 133 'அ' வட்டம் - தண்ட பாணி தெரு - தலைமை ச.சண் முகநாதன் - மாவட்ட அமைப் பாளர் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை.

3. 133 'அ' வட்ட செயலாளர் பி.மாரி தலைமையில் - வெங்கட் நாராயண ரோடு திருப்பதி தேவஸ்தானம் அருகில்

4. 133 வட்ட செயலாளர் பி.ஜெயக்குமார் தலைமையில் - ஆனந்தன் தெரு, வடக்கு உஸ் மான் சாலை சந்திப்பில்

5. பகுதி துணை செயலாளர் பாபா சுரேஷ் தலைமையில் - பாண்டி பஜார் தியாகராயர் சாலை.

இந்நிகழ்ச்சியில் 133வது மற் றும் 133 'அ' வட்ட கழக நிர்வா கிகள், மாவட்ட பிரதிநிதி கள், பகுதி பிரதிநிதிகள், பாக பொறுப்பாளர்கள், பாக உறுப்பி னர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற் றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட் டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கை யில் தெரிவித்தள்ளனர்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அரங்கேறிய பொள்ளாச்சி பாலியல் வழக்கு

குற்றம்சாட்டப்பட்ட 9 பேரும் பொள்ளாச்சி நீதிமன்றத்தில் ஆஜர்!

பொள்ளாச்சி, ஏப்.6-

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றம் சாட்டப் பட்ட 9 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

முந்தைய அதிமுக ஆட்சி யில் பொள்ளாச்சியில் இளம் பெண்களை வீடியோ எடுத்து, பாலியல் வன்கொ டுமை செய்த சம்பவம் தொடர்பாக, பாதிக்கப் பட்ட இளம்பெண்கள் மாவட்ட காவல் துறையில் புகாரளித்தனர். கோவை மாவட்ட காவல்துறையினர் முதலில் விசாரித்த நிலையில், இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. க்கு மாற்றப்பட்டு, பின்னர் சி.பி.ஐ.க்கு மாற்றம் செய்யப் பட்டது.

இந்த சம்பவம் தொடர் பாக, பொள்ளாச்சியை சேர்ந்த திருநாவுக்கரசு, சபரி ராஜன் உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர். இந்த வழக்கு விசா ரணை கோவை மகிளா நீதி மன்றத்தில் நடந்து வருகிறது. இந்நிலையில், இந்த வழக்கில் அரசுத் ரப்பு சாட்சியங்கள் முடிவடைந்த நிலையில், கைது செய்யப்பட்டு சிறை யில் உள்ள 9 பேரும் ஆஜர்ப டுத்தப்பட்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நா. புகழேந்தி
ஏப்ரல் 6 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் கிளைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியப் பொறுப்பாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட அவைத்தலைவர், பின்னர் இரண்டு முறை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்ற தலைவராவும் – ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"மக்களோடு மக்களாக வாழ்ந்த புகழேந்தி அவர்களது மறைவு, விக்கிரவாண்டி தொகுதிக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கும் மட்டுமின்றி, கழகத்திற்கும் பேரிழப்பாகும்" என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.